**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S. 96/2021**

**CNR.No.TNCB19000**

| Deposition | : | DW.1 |
|---|---|---|
| Name | : | ராஜாமணி |
| Father's / Husband's Name | : | சாமிக்கவுண்டன் |
| Village / முகவரி | : | தேக்கம்பட்டி |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | 49 |

The witness swearned under Oaths Act 1969 on this the day of 25th October 2025

**முதல் விசாரணை**

நான் ஏற்கனவே முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன் எனது தரப்பு ஆவணங்களை குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன்.

.**பிரதிவாதி தரப்பு சானறாவணங்கள்**

| வ. எண். | தேதி | ஆவண விபரம் | ஆவணத்தின் தன்மை | ஆவண வரிசை |
|---|---|---|---|---|
| 1 | 12.07.2022 | காளியண்ணன் மற்றும் 3 பேர்கள் பெயரில் க.ச.169/1B மற்றும் 168/4 ஆகிய காலைகளில் உள்ள பூமிகளுக்கு உண்டான பட்டா எண்.2767. | பதிவிறக்க நகல் | பி.வா.சா.ஆ.2 |
| 2 | 12.07.2022 | ராஜேஸ்வரி பெயரில் உள்ள க.ச.169/1C1 காலையில் உள்ள பூமிக்கு உண்டான பட்டா எண்.2061. | பதிவிறக்க நகல் | பி.வா.சா.ஆ.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 12.07.2022 | மாரண்ணன் பெயரில் க.ச.169/1C2 காலையில் உள்ள பூமிக்கு உண்டான பட்டா எண்.3387. | பதிவிறக்க நகல் | பி.வா.சா.ஆ.4 |
| 4 | 16.05.2022 | பிரதிவாதியாகிய என் பெயரில் க.ச.169/2 காலையில் உள்ள பூமிக்கு உண்டான பட்டா எண்.1368 | பதிவிறக்க நகல் | பி.வா.சா.ஆ.5 |
| 5 | 16.05.2022 | எனது பெயரில் க.ச.168/3 காலையில் உள்ள பூமிக்கு உண்டான பட்டா எண்.758. | பதிவிறக்க நகல் | பி.வா.சா.ஆ.6 |
| 6 | 27.07.2009 | என் பெயரிலும் பிறர் பெயரிலும் உள்ள பசிலி ஆண்டு 1379 முதல் 1410 வரைக்கான அடங்கல்கள் (எண்ணிக்கை - 12 ) | உண்மை நகல் | பி.வா.சா.ஆ.7 |
| 7 | 1996 | என் பெயரிலுள்ள பட்டா பாஸ் புத்தகம் | சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.8 |
| 8 | 10.05.2022 | க.ச.168 க்கான புல வரைபடம் | பதிவிறக்க நகல் | பி.வா.சா.ஆ.9 |
| 9 | 10.05.2022 | க.ச.169 க்கான புல வரைபடம் | பதிவிறக்க நகல் | பி.வா.சா.ஆ.10 |
| 10 | 10.05.2022 | க.ச.168 மற்றும் 169 க்கான ஒருங்கிணைந்த புல வரைபடம் | பதிவிறக்க நகல் | பி.வா.சா.ஆ.11 |
| 11 | | க.ச.169/2 ல் உள்ள செக் டேம் மற்றும் அரசு புறம்போக்கு நிலத்தை காட்டும் 5 புகைப்பங்கள் மற்றும் குறுந்தகடு. | அசல் | பி.வா.சா.ஆ.12 |

வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு வாதிகள் சரசம்மாள், வேலுச்சாமி , சென்னியப்பன் மற்றும் அம்மாசைகவுண்டர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட பூமியின் விஸ்தீரணம் மொத்தம் 8 ஏக்கர் 89 செண்ட் என்றால் சரிதான். மேற்கண்ட 8 ஏக்கர் 89 செண்ட்

பத்திரத்தில் இருந்தது. மேற்கண்ட 8 ஏக்கர் 89 செண்ட் பூமி ஆனது பத்திரத்தில் உள்ளதே தவிர நிலத்தில் உள்ளதா இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்கண்ட 8 ஏக்கர் 89 செண்ட் பூமி ஆனது கிரையம், பாகம் போக கடைசியாக கிரையம் பெற்றவர் நான் தான் என்றால் சரிதான். வாதிகள் சரசம்மாள், வேலுச்சாமி , சென்னியப்பன் மற்றும் அம்மாசைகவுண்டர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட பூமிகளுக்கு வடபுறத்தில் தேக்கம்பட்டி காரமடை ரோடு உள்ளது என்றால் சரிதான். தென்புறத்தில் குட்டைபள்ளவாரி உள்ளது என்றால் சரிதான்.

மொத்த பூமியின் கிழகோட்டில் தான் அம்மாசைகவுண்டரின் பூமி உள்ளது என்றால் சரிதான். மொத்த பூமியின் மேற்கோட்டில் தான் எனது பூமி உள்ளது என்றால் அம்மாசைகவுண்டர் பூமிக்கு மேபுறத்திலும் சர்சம்மாள் பூமிக்கு மேபுறத்திலும் உள்ளது. அம்மாசைகவுண்டர் பூமிக்கு மேபுறத்தில் தேக்கம்பட்டி - காரமடை ரோட்டில் இருந்து பள்ளவாரி வரை தென்வடல் வண்டிப்பாதை உள்ளது என்றால் சரிதான். அதனால் அம்மாசைகவுண்டர் பூமிக்கு மேற்புறம் எனக்கு பூமி உள்ளதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

மேற்கண்ட பூமியில் இரண்டு வண்டித்தடங்கள் உள்ளது என்றால் சரிதான். ஒரு வண்டிதடம் அம்மாசைகவுண்டர் பூமிக்கு மேற்புறம் செல்லக்கூடிய வண்டிதடம் என்றும் மற்றொன்று எனது பூமிக்கு கிழபுறம் செல்லக்கூடிய வண்டியதடம் என்றால் சரிதான். எனது பூமிக்கு கிழபுறம் செல்லக்கூடிய வண்டிதடம் ஆனது காரமடை - தேக்கம்பட்டி ரோட்டில் இருந்து தெற்கே சென்று சிறிது மேற்புறமாக சென்று எனது வீட்டை அடையும் என்றால் சரிதான்.

எனது பூமிக்கு கிழபுறம் உள்ள வண்டிதடம் ஆனது ரோட்டில் இருந்து குட்டை வரைக்கும் செல்கிறது, எனது பூமிக்கு கிழபுறத்தில் செல்லக்கூடிய வண்டிதடத்தில் யார் யாருக்கு உரிமை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. யார் யார் உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்றால் நான் மட்டும் தான் உபயோகபடுத்திவருகிறேன். நான் உபயோகபடுத்திவருவதாக சொல்லக்கூடிய வண்டிதடம் பூமிகளுக்குதென்புறம் உள்ள குட்டை பள்ளவாரி வரைக்கும் செல்வதில்லை.

நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வேறு ஒரு வழக்கை பழனிச்சாமி, சரசம்மாள் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அதன் பின்னர் வேலுச்சாமி, வசந்தாமணி மற்றும் சென்னியப்பன்

ஆகியோர்கள் அந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சரசம்மாள், வேலுச்சாமி, வசந்தாமணி மற்றும் சென்னியப்பன் ஆகியோர்கள் தாக்கல் செய்த எதிர்வாதத்தில் அம்மாசைகவுண்டர் , வேலுச்சாமி, சென்னியப்பன் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்ததும் சரசம்மாளுக்கு பாகம் கொடுத்த பூமி போக மீதி பூமியை தான் எனக்கு கிரையம் செய்து கொடுத்ததாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

மேற்கண்ட வழக்கில் மொத்தம் எவ்வளவு பூமி உள்ளது என்பதற்காக ஆணையாளரை வைத்து அளந்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அளந்து பார்த்தேன். சர்வேயரை வைத்து அளந்து பார்த்ததில் எனக்கு வரைபடம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த ஆணையரின் அறிக்கையும், வரைபடத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

மேற்கண்ட 8 ஏக்கர் 89 செண்ட் பூமி ஆனது ஆதியில் மருதமலை கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு M, பழனிச்சாமி என்ற ஒரே மகன் இருந்தார் என்றால் சரிதான். அது போக பொன்னம்மாள், இந்த வழக்கின் முதல் வாதி சரசம்மாள், சாவித்திரி மற்றும் பூவாத்தாள் ஆகிய 4 பெண்மக்கள் என்றால் சரிதான். அம்மாசைகவுண்டரை பொறுத்தவரைக்கும் மருதமலைக்கவுண்டர் உயிரோடு இருக்கும் போதே 1 ஏக்கர் பூமியை 17.07.1967 ஆம் தேதி அன்றே கிரையம் பெற்றுக் கொண்டார் என்றால் அது பற்றி தெரியாது. 30.05.1985 ஆம் தேதியில் வேலுச்சாமி, வசந்தாமணி மற்றும் சென்னியப்பன் ஆகிய 2 முதல் 4 வாதிகளின் தகப்பனார் S.பழனிச்சாமி க்கு 2 ஏக்கர் பூமியை M. பழனிச்சாமி என்பவர் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் சொத்து வாங்கும் போது வில்லங்கச்சான்றுகளை பார்த்து தான் வாங்கினேன். அந்த வில்லங்கச்சான்றில் 8 ஏக்கர் 89 செண்ட் பூமியை பொறுத்து எவ்வளவு கிரையம், எத்தனை பத்திரங்கள் ஆகியுள்ளது என்பதை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்க சான்றில் அம்மாசைகவுண்டர் கிரையம் பெற்றதும், S.பழனிச்சாமி கிரையம் பெற்றதும் M. பழனிச்சாமிக்கும் அவரது சகோதிரிகளுக்கும் இடையே ஏற்பட்ட பாகபத்திரம் ஆகியவை இடம் பெற்றிருந்ததா என்றால் அம்மாசைகவுண்டர் மற்றும் S.பழனிச்சாமி ஆகிய இரண்டு பெயர்களில் மட்டுமே இடம்பெற்றிருந்தது.

நான் வில்லங்கச்சான்று இல்லாமல் M.பழனிச்சாமி மற்றும் அவரது சகோதரிகளுக்கு இடையே ஏற்பட்ட பாகபத்திரத்தை பார்க்காமல் கிரையம் பெற்றுக் கொண்டேன் என்றால் நான் பார்க்கவில்லை. எனது பெயரில் உள்ள பத்திரங்களை பார்த்து படித்து தயார் செய்த ஆவணங்கள் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.8 ஆனது எனக்கு M. பழனிச்சாமி என்பவர் எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் என்றால் சரிதான்.வா.த.சா.ஆ.6 ஆனது 03.05.1991 ல் எனக்கு M. பழனிச்சாமி என்பவர் எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு பத்திரங்களிலும் M. பழனிச்சாமி குடும்பத்தார்களுக்கு இடையே ஏற்பட்ட பாகபத்திரத்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்கண்ட பாகபத்திரத்தை பத்திர எழுத்தரிடம் கொடுத்துதான் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகபத்திரத்தில் M. பழனிச்சாமிக்கு எனக்கு விற்பனை செய்யக்கூடிய சொத்தில் உரிமை உள்ளதா என்பதை பார்த்து தான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

( வாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.10.25 18:30:23 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.